**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 88 /2019**

வாக்குமூலம்: பி.வா.சா.2 – காதர்ஷா

**12.02.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அழைப்பாணை என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அழைப்பாணை வந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் எந்த இடத்தில் வைத்து யார் சொல்லி தயார் செய்யப்பட்டு எங்கு கையெழுத்திட்டேன் என்றால் பிரதிவாதி சொல்லியதன் பேரில் வழக்கறிஞர் அலுவலகத்தில் கையெழுத்திட்டேன். எனக்கும், பிரதிவாதிகள் என்ன உறவு முறை என்றால் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்.

2. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் வழக்குச் சொத்தை வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சர்வே 829/10ல் உள்ள பொதுப் பாதையை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்829/10 ல் வருவாய் ஆவணங்களில் உள்ளது போல எத்தனை சதுரடி வீதி உள்ளது என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. அதில் 1857 சதுரடியில் சிமெண்ட் தளத்துடன் வீதி உள்ளது என்றால் சரிதான். சர்வே 829/11ல் வீரப்பசெட்டியார் கோவில் வீடு அளவுகள் எவ்வளவு என்றால் 1–1/2 செண்ட் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி 199 சதுரடி தான் உள்ளது என்றாலும் சரியல்ல.

3. 1ஆம் பிரதிவாதி க்கு சர்வே 829/10ல் எத்தனை சதுரடிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் ( ¾ ) முக்கால் செண்ட் ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும், 1ஆம் பிரதிவாதிக்கு 157 சதுரடிக்குத் தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

2. சர்வே 829/11ல் வீரப்பசெட்டியார் கோவில் வீட்டையும் சேர்த்து தான் 1 ஆம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சர்வே 829/11ல் வீரப்பசெட்டியார் கோவில் வீட்டுக்கு மேற்கு சர்வே

எண்.829/12ல் 471 சதுரடி வீதி உள்ளது என்றால் வீதி இல்லை வீடு தான் உள்ளது.

4. சர்வே 829/11ல் வீரப்பசெட்டியார் வீட்டை சுற்றி சர்வே 829/10ல் புறம்போக்கு பாதை உள்ளது என்றால் சரியல்ல. வாதி வீட்டுக்கு தெற்கு பார்த்து வாசல் உள்ளது என்றால் இல்லை. வாதி விட்டை விட்டு வெளியில் வரும் இடத்தில் பொதுப்பாதை உள்ளதா என்றால் சரிதான். பாதை அனைவருக்கும் பொதுப்பாதையாகத் தான் உள்ளது. சர்வே 829/11ல் வீரப்ப செட்டியார் கோவில் வீட்டிற்கும் தெற்கே வீதியும் ஜியாவுதீன் வீடும், மைதீன் பாட்சா வீடும் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே 829/10ல் வீதியை மறைத்து பிரதிவாதிகள் சுவர், குளியலறை, காம்பவுண்ட் சுவர், தடுப்பு சுவர் அமைத்து வாதி நடப்பதை பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள் என்றால் இல்லை.

5. கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் மூலமாக வாதி வைத்திருந்த தொட்டி பிரதிவாதிகள் வைத்திருந்த குளியலறை, காம்பவுண்டு சுவர் ஆகியவற்ளை பஞ்சாயத்து அலுவலர்கள் அளவீடு செய்து பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி விட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் முன்பகை காரணமாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும், எனக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் எனவே எனது சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.02.13 17:28:29 +0530

District Munsif,
Palani.